PON VIDYASHRAM GROUP OF SENIOR SECONDARY SCHOOLS

**CLASS – IV ஜனவரி மாத பாடப் பகுதிகள்**

**பாடம்:**

1. ஆனந்தம் விளையும் பூமியடி (பாடல்)
2. கணினி உலகம் (உரைநடை)
3. மலையும் எதிரொலியும் (துணைப்பாடம்)

1. ஆனந்தம் விளையும் பூமியடி (புத்தகப் பயிற்சி மட்டும்)

## 2. கணினி உலகம்

**I. வினா-விடை:**

**1. சென்னையில் பூவிழி கண்டுகளித்த இடங்கள் யாவை?**

**விடை:** அடுக்குமாடிக் கட்டடங்கள், மிகப்பெரிய சாலை, மெரினா கடற்கரை, விமான நிலையம், அண்ண - நூற்றாண்டு நூலகம், உயிர்க்காட்சிச் சாலை, பொழுது போக்கு மையங்கள் தகவல் தொழில் -நுட்பப் பூங்கா ஆகியவை சென்னையில் பூவிழி கண்டுகளித்த இடங்கள் ஆகும்.

**2. கணினியின் முதன்மைப் பகுதிகளை எழுதுக.**

**விடை:** கணினியின் முதன்மைப் பகுதிகள்:-

- மையச் செயல்பாட்டுப் பகுதி
- கட்டுப்பாட்டகம்.
- நினைவகம்
- உள்ளீடு மற்றும் வெளியீடு

**3. இணையம் என்றால் என்ன?**

**விடை:** கணினிகளின் தொடர்ச்சியான வலை அமைப்புகள் சேர்ந்திருக்கும் இணைப்பே வலைத்தளம் அல்லது இணையம் எனப்படுகிறது.

4. மின்னஞ்சல் எதற்குப் பயன்படுகிறது?

**விடை:** கணினிகளுக்கு இடையே இணையத்தின் வாயிலாகச் செய்யப்படும் தகவல் பரிமாற்றமே மின்னஞ்சல். இது தகவல்களைப் பரிமாறிக் கொள்ளப் பயன்படுகிறது.

## 3. மலையும் எதிரொலியும்

**I. வினா-விடை:**

1. **தந்தையும் மகனும் எங்குச் சென்று கொண்டிருந்தனர்?**

   **விடை:** தந்தையும் மகனும் மலைப்பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்தானர்.

2. **சிறுவன் பேசியபோது மலை என்ன செய்தது?**

   **விடை:** சிறுவன் பேசியபோது மலையானது எதிரொளித்தது.

3. **சிறுவன் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலை என்ன சொல்லி இருக்கும் ?**
   **விடை:** சிறுவன் "நான் அன்பு கொண்டவன்" என்று சொல்லியிருந்தால் மலையும் நான் அன்பு கொண்டவன் என்று சொல்லி இருக்கும்.

4. **இக்கதையின் மூலம் தந்தை மகனுக்குக் கூறிய அறிவுரை யாது?**

   **விடை:**

   - “நீ மற்றவர்களிடம் அதிகமான திறமை எதிர்பார்த்தால் முதலில் உன்னுடைய திறமையை அதிகரித்துக் கொள்.”
   - நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது."
   - நாம் எதைக் கொடுக்கிறோமோ, அதையே வாழ்க்கையும் நமக்குத் திருப்பிக் கொடுக்கிறது."
   - உன்னுடைய வாழ்க்கை எதிர்பாராமல் நடக்கும் ஒன்றன்று. அது உன்னுடைய “எதிரொலிதான்” என்று தந்தை மகனுக்கு. அறிவுரைக் கூறினார்.